13.08.2025

அ.வ.எண். 31/2023

வா.சா.1 கனிதா குறுக்கு விசாரணை

1. எனது சொந்த கிராமம் தேவராஜபுரம் என்றால் சரிதான். தாவா கிராமத்திற்கு வந்த பிறகு பலராமன் என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றேனா என்றால் சரியல்ல. எனது கணவர் வாங்கிய சொத்தாகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தாவாசொத்தில் கூரை வீடு கட்டியிருப்பதாக உள்ளது என்றால் சரிதான் முதலில் கூரை வீடாகதான் இருந்தது அதன்பின்பு நாங்கள் பின்பகுதிக்கு சென்றுவிட்டு முன்பகுதியில் கல்வீடு கட்டினோம். கூரை வீடு கட்டின பகுதி 1 1/2 செண்ட் இருக்கும். கூரைவீடுக்கு பக்கத்தில் கட்டிட வீடு இருக்கிறது இரண்டு வீட்டிற்கும் இடைவெளி 20 அடி இடைவெளி இருக்கும். கல்வீடு கட்டின இடம் 2 1/2 செண்ட் இருக்கும்.

2. கல்வீட்டில் உள்ளேதான் கழிவறை உள்ளது என்றால் சரிதான். கூரை வீடு மற்றும் கல்வீடு சேர்த்து மேலும் இடையில் உள்ள காலி இடம் சேர்த்து மொத்தம் 12 செண்டு இருக்குமா என்றால் இருக்கும். கூரை வீடு வடக்கு பார்த்துள்ளது கல்வீடு தெற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். கூரைவீட்டுக்கு வடக்க பக்கம் சிமெண்ட் சாலை ஒரு வாரத்திற்கு முன்பு போடப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு அது மண்சாலையாக இருந்தது என்றால் சந்தாக இருந்தது. நான் அனுபவித்து வரும் மொத்தம் 12 செண்டிற்கு நிலத்திற்கு கிழக்கு பக்கம் புத்தியப்பன் இருக்கிறார், மேற்கு திசையில் வளர்மதி மற்றும் குபேந்திரன் இடம் உள்ளதா என்றால்

சரியல்ல. காலி இடம்தான் உள்ளது அது 4ம் பிரதிவாதியின் இடமாகும்.

3. 1, 2 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதி அண்ணாதுரைக்கு மாமா அக்கா ஆவார்கள். 3ம் பிரதிவாதி அண்ணாதுரையின் மனைவி ஆவார். மேற்சொன்ன காலி இடம் எவ்வளவு விஸ்தீரணம் இருக்கமென்றால் எனக்கு அளவு தெரியாது. என்னுடைய சொத்து 12 செண்டிற்கு தெற்கு பக்கம் அண்ணாதுரை மற்றும் கற்பகம் கல்வீடு கட்டி தற்போது வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. லோகநாயகி என்பவருக்கு வழங்கபட்ட இடம் அதில் 3,4 பிரதிவாதிகள் கல்வீடு கட்டி வசித்து வருகிறார்கள்.

4. எனது 12 செண்ட் நிலத்திற்கும் அண்ணாதுரை வீட்டிற்கும் இடையே கற்கள் அமைத்து கம்பி கட்டியுள்ளார் என்றால் 2023ம் வருடம் அவர்கள் கற்கள் ஊன்றும்போது பிரச்சனை ஆகி நாங்கள் புகார் அளித்தோம். தற்போது கம்பிவேலி உள்ளதா என்றால் உள்ளது. அதை 4ம் பிரதிவாதிதான் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். அண்ணாதுரை கல்வீட்டுக்கு கிழக்கே மலர் என்பவர் குடியிருந்து வருகிறார்.

5. அண்ணாதுரை வீட்டிற்கு தெற்கே லோகநாயகி வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி எங்கள் இடத்தில் வேலி அமைத்து மரத்தை வெட்டியதால் மேலும் ரோட்டு இடத்தை தடை செய்ததால் புகார் கொடுத்தோம். வழி பிரச்சனை என்னுடைய 12 செண்ட் நிலத்திற்கு தெற்கு பக்கம் உள்ள ரோட்டுக்காகதான் எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சினை என்றால் சரிதான். ரோடு என்று காட்டுவதற்கு நான் நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

செய்துள்ளேன். ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை மேலும் புகைபடம் கூட தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**6.**எனது வழக்குரை மற்றும் பிரமாணவாக்கமூலத்தில் என்னுடைய சொத்திற்கு தெற்கு பக்கம் ரோடு உள்ளது என்று நான் கூறவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தின் **4** மால் என்னவென்றால் வடக்கு பக்கம் சிமெண்ட் ரோடு, கிழக்கு பக்கம் புத்தியப்பன் நிலம், தெற்கே காலி மனை உள்ளது அதை அண்ணாதுரை அனுபவித்து வருகிறார், மேற்கு பக்கம் உள்ள காலிமனையையும் அண்ணாதுரை அனுபவித்து வருகிறார். தெற்கு பக்கம் உள்ள இடத்தில் தான் அண்ணாதுரை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

**7.** மேலே சொன்ன **4** மால்கள் நான் ஏற்கனவே சொன்ன **12** செண்ட நிலத்திற்குரிய ஜக்குபந்திதான் என்றால் சரிதான். நான் எத்தனை செண்ட நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் **2 1/2** செண்ட் நிலத்திற்குதான் தாக்கல் செய்துள்ளேன். பின்பகுதி கல்வீடு **2007**ம் வருடம் கட்டினேன். மறுபடியும் கூரைவீடு பிரித்துவிட்டு மேலும் அதே இடத்தில் கல்வீடு **2007**ம் வருடம் கட்டினேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தெற்கு திசையில் **4**ம் பிரதிவாதி கட்டிய வீட்டை கட்ட கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரிதான். அது சம்பந்தாமாக

காவல்நிலைதய்தில் புகார் கொடுததேன் என்றால் சரிதான். அந்த பிரச்சனை சம்பநத்நமாக தான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.7 நான் காவல்நிலையத்தில் எழுதி கொடுத்த ஆவணம் அதில் நான் பிரதிவாதி வீடு கட்டுவதை ஆட்சேபணை செய்யமாட்டேன் என்று எழுதி கொடுத்தேனா என்றால் சரிதான். பிரதிவாதி பிரச்சனை செய்ததால் எழுதி கொடுத்தேன். தற்போதும் 4ம் பிரதிவாதி வீடு கட்டுவதை நான் தடுத்து கொண்டுதான் இருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை காரணம் காட்டி பிரதிவாதி வீடு கட்டுவதை நான் தடுக்கிறேன் என்றால் சரிதான். அவர் என்னுடைய இடத்தில் வீடு கட்டுகிறார்.

9. தாவா சொத்தில்தான் பிரதிவாதி வீடு கட்டுகிறார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாசொத்து அருகில் உள்ள வடக்கு பக்கம் உள்ள சிமெண்ட சாலையின் அருகில் 2 1/2 செண்ட் இடத்தில்தான் கூரைவீடு கட்டி அனுபவித்து வந்தேன் அதற்கு தெற்கு திசையில் 20 அடி தள்ளி கல்வீடு கட்டி இருக்கிறேன் ஆக மொத்தம் 2யும் சேர்த்து 12 செண்ட் இடம் அனுபவித்து வருவதை பிரதிவாதி தடுக்கவில்லை என்றாலும் மேலும் தாங்கள்தான் 12 செண்ட் இடத்திற்கு தெற்கு பக்கம் அண்ணாதுரை வீடு கட்டி வருவதை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

10. மேலும் தாவாசொத்திற்கு தெற்கு திசையில் வழி இருக்கிறது

என்று கோரினால் தாங்கள் கட்டியுள்ள கூரை வீட்டிற்கும் கல்விட்டிற்கு இடையே உள்ள இடம்தான் வழியாக வருகிறது அதனால் பிரதிவாதியின் வீடு கட்டும் இடத்தில் எந்த உரிமையும் இல்லாமல் வீணாக இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நடக்கும் சொத்திற்கு அருகில் உள்ள அனைத்து இடமும் ஆதிதிராவிடர் நலத்துறை யால் ஒதுக்கபட்ட இடம் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் லோகநாயகி அம்மாள் ஆகியோர்கள் ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

11. ஆதிதிராவிடர் நலத்துறையால் வழங்கப்டட இடத்திற்கு பட்டா கொடுத்திருப்பார்கள் அதில் எந்த திசையில் ரோடு இருந்திருக்கும் என்று வரைபடம் இருக்கும் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான் எனது கணவர் ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவர். எனவே நான் தவறாக ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பட்டா வாங்கி அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

12. எனது ஆதிதிராவிடர் நலத்துறையில் கொடுத்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது வா.சா.ஆ.1 ஆகும். வழக்கு வேறு ஒரு இடத்திறகு தாக்கல் செய்யபட்டு வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத இடத்திற்கு பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.